திருப்பதாகக் கூறுகிற நிலையிருக்கிறது. எனவே, கனம் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தயவுசெய்து, சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் என்கிற காரணத்திற்காக பழி வாங்காமல், அந்தத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு ஏற்றுக்கொள்ள அமைச்சர் அவர்கள் இதற்கு உடந்தையாக இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையில், உடனடியாக இதைத் தீர்க்கக் கூடிய வகையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே. நான் ஏற்கனவே சொன்னதுபோல் 4 பேர்கள் தான் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டு, வேலைநீக்கம் செய்திருப்பதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது. 50 தொழிலாளர்கள் வேலைநீக்கம் பற்றிய விவரங்கள் தொழிற்சங்கப் பிரதிநிதியால் இன்னும் தரப்படவில்லை. அங்கே ஒரே ஒரு சங்கம் தான் இருக்கிறது என்பது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். போட்டிச் சங்கம் ஏற்பட வேண்டியதில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 50 தொழிலாளர்களின் முழு விவரங்களை, லேபர் ஆபீசருக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

## (உ) புளியங்குடி நகர விசைத்தறி நெசவாளர்கள் உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற செபரணம் ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. ஆர். கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, புளியங்குடி நகரததிலுள்ள விசைத்தறி நெசவாளர்களைப் பழி வாங்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ள ஒருசில விசைத்தறி நிலைய முதலாளிகளது போக்கை எதிர்த்து தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பதால் நிலவும் பதட்ட நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்றினை அவையின் முன் வைக்க அனுமதி கோருகிறேன்.

விசைத்தறி தொழிற்சாலைகளுக்கு 1948–ம் வருடத்திய தொழிற்சாலைகளின் சட்டம் அமுல் படுத்தப் படுகிறது. திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடியில் 13 விசைத்தறி தொழிற்சாலைகள் இயங்குகின்றன. இவைகளில் 191 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இத்தொழிற்சாலைகளில் 10 தொழிற்சாலைகள், தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாத மூன்று தொழிற்சாலைகளில் தான் குழப்பம் ஏற்பட்டது.

2. புளியங்குடியில் இயங்கும் பதிவு செய்யப்படாத விசைத்தறி தொழிற்சாலைகளைப் பற்றி சி. ஐ. டி. யூ. தொழிற்சங்கம் கொடுத்த புகாரின் அடிப்படையில், திருநெல்வேலியில் உள்ள உதவி தொழிற்சாலை ஆய்வாளர் பின்வரும் இரு தொழிற்சாலைகளை ஆய்வு செய்தார்.

(1) கஸ்தூரி விசைத்தறி தொழிற்சாலை. (ஆய்வின் போது பணிபுரிந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை. 16)

(2) சுப்பைய நாடார் விசைத்தறி தொழிற்சாலை. (ஆய்வின்போது பணிபுரிந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 20.)

3. திருநெல்வேலியிலுள்ள உதவித் தொழிற்சாலை ஆய்வாளர் 24—2—1979-ல் ஆய்வுசெய்து, தொழிற்சாலைகளை பதிவு செய்யாததற்கு காரணம் காட்டச் சொல்லி நிர்வாகத்தினர்களுக்கு அறிவிப்புகள் கொடுத்துள்ளார். இதன் தொடர்ச்சியாக நிர்வாகத்தினர்கள் தங்களது விசைத்தறி தொழிற்சாலைகளைத் தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு செய்ய மனுச் செய்துள்ளார்கள்.

4. மேற்கூறிய தொழிற்சாலைகள் மற்றும் முருகன் டெக்ஸ்டைல்ஸ் விசைத்தறித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், இத்தொழிற்சாலைகளில் உள்ள கணக்கர்களை அச்சுறுத்தியதாகக் கூறி, கணக்கர்கள் பணிக்கு வருவதை நிறுத்திவிட்டார்கள். கணக்கர்களுக்கு ஆதரவு காட்டி நிர்வாகத்தினர்கள் மேற்கூறிய தொழிற்சாலைகளை 1—3—1979 முதல் கதவடைப்பு செய்தனர். இக்கதவடைப்பு முறையற்றது என்றும் கதவடைப்பு நீக்கப்பட வேண்டும் என்றும் கோரி நகர விசைத்தறி தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் (சி. ஐ. டி. யூ.) 2—3—1979 முதல் உண்ணா நோன்பு மேற்கொண்டனர், தொழிலாளர்களின் போக்கு சரியில்லை என்றும், தங்களுடைய உயிருக்கும் பாதுகாப்பு வேண்டும் என்றும் கோரி நகர கணக்கர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளும் உண்ணா நோன்பு மேற்கொண்டனர்.

1979 எப்ரல் 30] [திரு. எஸ். இராகவானந்தம்]

5. 6—3—79-ல் தொழிலாளர் துறை அலுவலர் இருதரப்பினரையும் அழைத்து விசாரித்தார். கணக்கர்கள் எப்போது வேலைக்கு வருகிறார்களோ அன்றிலிருந்து கதவடைப்பை நீக்குவதென நிர்வாகத்தினர்கள் தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டது. 9—3—79 அன்றும் தொழிலாளர் துறை அலுவலர் முன் மீண்டும் பேச்சு வார்த்தைகள் நடந்தன. தொழிலாளர் துறை அலுவலரின் அறிவுரையின் பேரில் நிர்வாகத்தினர்கள் கதவடைப்பு 10—3—79-ல் நீக்கம் செய்தனர். தொழிலாளர்களும் கணக்கர்களும் 10—3—79-ல் இருந்து வேலையில் ஈடுபட்டுள்ளார்கள்.

6. புளியங்குடியிலுள்ள விசைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் யாரும் வேலை நீக்கம் செய்யப்பட்டதாகத் தகவல் இல்லை.

7. இப்பொழுது நிலைமை அங்கு சுமூகமாக இருக்கிறது.

திரு. ஆர். கிருஷ்ணன் : இந்த விவர அறிக்கையில் 191 தொழிலாளர்கள் பணியாற்றுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அங்குள்ள ஒரே ஒரு தொழிற்சாலையில் மட்டும் 400 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆக, இப்படி சட்டத்தை மோசடி செய்யக்கூடிய போக்கு அங்குள்ள விசைத்தறி நிறுவனங்களில் இருப்பதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : முதலாளிகள் ஏமாற்றாமல் இருக்க டைம் கார்டு கொடுக்கவேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதை மேலவையில் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணன் : குறிப்பிடப்பட்டிருக்கும் அறிக்கையில் பாக்டரி இன்ஸ்பெக்டர் போகும் நேரத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள்தான் அந்தத் தொழிற்சாலையின் எண்ணிக்கை என்று கூறப்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் ஷிப்ட் முறை இருக்கிறது, ஒரு ஷிப்டில் 12 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் மூன்று ஷிப்டில் எத்தனை தொழிலாளர்கள் என்று பார்க்கவேண்டும். ஒரு தொழிற்சாலையில் நான்கு தறிகளுக்கு அடுத்தாற்போல் ஊடே ஒரு சுவரை எழுப்பிவிட்டு வேறு பெயரில் பினாமியாக நடத்தக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர்க்க அரசு முன்வருமா?

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : புரட்சித் தலைவர் ஆட்சியில் செய்திருக்கக்கூடிய, மிகப் புரட்சிகரமான, தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய ஏற்பாடே இதுதான். அதாவது ஒவ்வொரு தொழிற்சாலையிலும் கேஷுவல் லேபராக இருந்தாலும், பதிலியாக இருந்தாலும், யாராக இருந்தாலும் டைம் கார்டு கொடுக்கப்படவேண்டும். அது அந்தத் தொழிலாளர்கள் கையிலேயே இருக்கவேண்டும். அதன் காரணமாக தொழிலாளர்கள் யாரும் தங்களிடத்தில் வேலை செய்யவில்லை என்று சொல்ல முடியாது—There is no relationship of master and servant—ஏமாற்றிவிடக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவை முடிந்த பிறகு என்னிடம் வந்து இன்னின்ன தொழிற்சாலைகளில் இவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள் என்று ரகசியமாக—கான்ஃபிடென்ஷியலாக சொல்லுவார்களானால் அதற்குப் பிறகு அதிகாரிகளை அனுப்பி பரிசோதனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கிறேன் என்று வாக்குறுதி தருகிறேன்.

(ஊ) திருச்சி துறையூர் கிராமத்தில் ரெட்டியார் என்ற உயர் சாதியினர் கொண்டாரெட்டி என பொய் சான்றிதழ் பெற்று பிற்பட்ட வகுப்பினர்களுக்கான சலுகைகள் பெறுவது குறித்து—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். வி. இராமசாமி, வ. சின்னசாமி, ஆர். காளியப்பன் ஆகியோர் மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் கொண்டு வருவார்கள்.

திரு. எஸ். வி. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்ட துறையூரிலுள்ள ரெட்டியார் என்ற உயர்சாதியினர், தங்களை பழங்குடி வகுப்பைச் சேர்ந்த கொண்டா ரெட்டி என்ற சான்றிதழ்களை வைத்துக் கொண்டு, மலைசாதி, பிற்பட்ட வகுப்பினருக்குரிய சலுகைகளை சட்ட விரோதமாக அனுபவித்து வருவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் விவர அறிக்கை ஒன்றை வைக்க அனுமதி கோருகிறேன்.

''கொண்டாரெட்டி'' என்ற இனம் 1950-ம் ஆண்டில் பழங்குடியினர் பட்டியல் தயாரிக்கப்பட்ட போது, பகுதி கட்டுப்பாட்டுடன் பழங்குடியினர் பட்டியலில் காணப்பட்டது. அதாவது.